

சிவகங்கை மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞரும், சிவகங்கை முன்னாள் நகரச் செயலாளருமான ஆதி.அழகர்சாமி மகன் அ.கார்த்திகேயன் – வீ.ஜோதீஸ்வரி ஆகியோரது திருமணம் அண்மையில் நடைபெற்றதை முன்னிட்டு மணமக்களை அவர்களது இல்லம் சென்று சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரிய கருப்பன் வாழ்த்தினார். உடன் திருமதி. தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் ஆகியோர் உள்ளனர்.

## தமிழ்நாட்டில் கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 14-

தமிழ்நாட்டில் நாளை கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கை என இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

7 முதல் 11 செ.மீ. வரை மழை பெய்யும் என்பதால் நாளை மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் 7 நாட்கள் மிதமான மழைக்கு வாய்ப்பு எனவும் இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

### சமூக அநீதிகளை அழித்தொழித்த

# கலைஞர் ஒரு யுக புருஷர்!

### பீட்டர் அல்போன்ஸ் புகழாரம்!



**சென்னை, ஜூலை 14-**

**“தலைவர் கலைஞர் தான் வாழ்ந்த காலத்துச் சீர்கேடுகளையும் மூடப்பழக்கங்களையும், சமூக அநீதிகளையும் அழித்தொழித்த ஒரு யுக புருஷர்” என்று தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத் தலைவர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

தலைவர் கலைஞர் தான் வாழ்ந்த காலத்துச் சீர்கேடுகளையும், மூடப்பழக்கங்களையும், சமூக அநீதிகளையும் அழித்தொழித்த ஒரு யுக புருஷர்.

அவரை வாழ்த்தியவர்களும் உண்டு! தூற்றியவர்களும் உண்டு! ஆனால் யாராலும், எக்காலத்திலும் தவிர்க்கப்பட முடியாதவர்.

இந்திய நாட்டின், தமிழகத்தின் இரண்டு நூற்றாண்டு வரலாற்றின் ஒவ்வொரு பெரும் திருப்பத்திலும் அவர் தன் கால் தடம் பதித்தவர். அவரது வார்த்தைகளில் சொன்னால் “தன் மீது எறியப்பட்ட மலத்தையும், சாணத்தையும், காரி உமிழப்பட்ட எச்சிலையும், இழிந்ததுகள் தன்மேல் கழித்த சிறு நீரையும் தன் காலால் உண்டு, உடலால் செரித்து, உள்ளத்தில் வாங்கி, உணர்வால் ஓங்கி வளர்ந்தவர்.

உயரப்பறக்கும் கழுகின் கழுத்தில் அமரும் கரிச்சான் குஞ்சை, கழுகு என்றுமே காயப்படுத்தியதில்லை. கழுகு பறக்கும் காற்றின் வேகமே அதன் உயிர் குடிக்கும்..

மனநிலை திரிந்த ஞான சூனியங்கள் கலைஞரை இகழ்ந்து இனப்பகைவர்கள் தரும் ஈனப்பிச்சைக்காக விழுந்து கிடக்கின்றன!

கடல் உள்ள வரை, தமிழ் மண் உள்ளவரை கலைஞரின் புகழ் வாழும்!

இவ்வாறு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



**பீட்டர் அல்போன்ஸ்**
தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர்

### தமிழ்நாட்டில்

# மனுநீதிச் சோழன் போல் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார் முதல்வர்!

### கள்ளக்குறிச்சி ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாமில் அமைச்சர் எ.வ.வேலு பெருமிதம்!



கள்ளக்குறிச்சி, ஜூலை 14-

தமிழகத்தில் மனுநீதி சோழன் போல் சிறப்பான ஆட்சி செய்து வருகிறார் நமது தமிழக முதல்வர் என மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமில் அமைச்சர் எ.வ.வேலு பெருமிதத்துடன் கூறினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட வாணாபுரத்தில் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை பொதுப் பணி நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறை முகங்கள் அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் தலைமையில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர், தா.உதயசூரியன், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர்கள் முன்னிலையில் இம்முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

தமிழகத்தில் மனுநீதி சோழன் போல் மிகச் சிறப்பான முறையில் ஆட்சி செய்து வருகிறார் நமது தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், இந்தியாவில் ஆட்சி புரியும் முதல்வர்கெல்லாம் முதல்வராக சிறந்த முதல்வராக நமது முதல்வர் திகழ்ந்து வருகிறார் மேலும் 24 மணி நேரமும் பொது மக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் வசதிகளையும் நிதிகளையும் உடனடியாக கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அயராமல் உழைத்துக் கொண்டு வருகிறார்.

மேலும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊமராட்சிகளிலும் உள்ள பொதுமக்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெற வேண்டும் என்பதற்காகத்தான் முதலமைச்சர் நேற்று முன்தினம் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத் தினை தருமபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக வாணாபுரம் ஊராட்சியில் ஊரகப் பகுதியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களில் நேற்று முன் தினம் முதல் தொடங்கி வருகிற 12.9.2024 வரை 70 முகாம்கள் நடைபெற உள்ளது, இம்முகாம்களை பொது மக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும். இத்திட்டத்தின் கீழ், பெறப்படும் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான பொது மக்களின் மனுக்களை மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையில், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் விரைவாக பரிசீலனை செய்து, மனுக்களுக்கு தீர்வு காண உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சத்தியநாராயணன், ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள், துரை முருகன், பாரதிதாசன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் புவனேஷ்வரி பெருமாள், ரிஷிவந்தியம் ஒன்றியக் குழுத்தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்ரமணியன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் மு.தங்கம், ஒன்றிய குழு துணைத் தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை, ரிஷி வந்தியம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், சந்திரசேகரன், வாணாபுரம் வருவாய் வட்டாட்சியர் குமரன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் கோவிந்தராஜன், அமிர்தம், ராஜேந்திரன், வாணாபுரம் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் மணிகண்டன், ஊராட்சி மன்றத் தலைவர் தீபா அய்யனார், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### பெருந்தலைவர் காமராசர் 121வது பிறந்தநாள்: திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# காமராசர் திருவுருவச் சிலைக்கு - அமைச்சர் கே.என்.நேரு மாலை அணிவிக்கிறார்!

### மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி – ந. தியாகராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருச்சி, ஜூலை 14-

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந. தியாக ராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 121வது பிறந்தநாளை முன்னிட்டு திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் அவரது பிறந்தநாளான நாளை 15.07.2024ம் திங்கட்கிழமை காலை: 8.00 மணியளவில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்களின் தலைமையிலும், எங்கள் (க.வைரமணி, காடுவெட்டி ந.தியாக ராஜன், மு.அன்பழகன்) முன்னிலையிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு கர்மவீரர் காமராசர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

### கள்ளச்சாராயம் விற்றால் ஆயுள் வரை சிறை

# சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வருகிறது!

### ஆளுநர் ஒப்புதல்!

சென்னை, ஜூலை 14 -

தமிழ்நாடு அரசு சட்டப்பேரவையில் நிறைவேற்றிய மதுவிலக்கு சட்டத் திருத்த மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்துள்ளார். இதன் மூலம் கள்ளச்சாராயம் தொடர்புடைய வழக்குகளில் ஆயுள் வரை சிறைத் தண்டனை மற்றும் ரூ. 10 லட்சம் வரை அபராதம் விதிக்கும் தமிழக அரசின் சட்டம் விரைவில் நடைமுறைக்கு வருகிறது.

கள்ளக்குறிச்சி கருணாபுரம், மாதவச்சேரி, சேஷசமுத்திரம் பகுதிகளில் ஜூன் 19 அன்று விஷச் சாராயம் குடித்த 229 பேர் உடல் நலம் பாதிக்கப்பட்டனர். 66 பேர் வரை பலியாகினர். தமிழகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த துயரத்தைத் தொடர்ந்து, கள்ளச் சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கும் நோக்கில், அதற்கான தண்டனைகளை கடுமையாக்க வகைசெய்யும் மதுவிலக்கு சட்டத் திருத்த மசோதாவை, தமிழ்நாடு அரசு கடந்த ஜூன் 29 அன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றியது.

இதில், கள்ளச்சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கும் வகையில், அதை தயாரிப்பவர்கள் விற்பனை செய்பவர்களுக்கு ஆயுள் வரை கடுங்காவல் தண்டனையோடு, 10 லட்சம் ரூபாய் வரை அபராதத் தொகையை உயர்த்தி கடுமையான தண்டனைகளை விதிப்பதற்கான சட்டத்திருத்தத்தை மேற்கொண்டது.

இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து பேசிய அமைச்சர் எஸ். முத்துச்சாமி, “தற்போதுள்ள 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் படி விதிகளை மீறி மதுவினை இறக்குமதி செய்வது, ஏற்றுமதி செய்வது, அருந்துதல், மனித உயிருக்கு கேடு விளைவிக்கக்கூடிய கள்ளச் சாராயத்தை தயாரித்தல், உடைமையில் வைத்திருத்தல், விற்பனை செய்வது போன்று வழக்கமாக நடைபெறும் குற்றங்களுக்கு வழங்கப்படக் கூடிய தண்டனைகள் போதுமானதாக இல்லை என்று கருதி இச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார். மேலும், “தற்போதைய சட்டத் திருத்தத்தில் சிறைத் தண்டனையின் கால அளவும், அபராதத் தொகையினுடைய அளவும் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மதி மயக்கக்கூடிய மருந்தினை தயாரிப்பது, கொண்டு செல்வது, வைத்திருப்பது மற்றும் நுகர்வுக்கு தடை விதிக்கப் பட்டிருக்கிறது.

இவ்வாறு அந்த மதுவினை அருந்துவதால் மரணம் ஏற்பட்டால் ஆயுள் காலம் வரை கடுங்காவல் சிறைத் தண்டனையோடு பத்து லட்ச ரூபாய் வரைக்கும் அபராதத் தண்டனை விதிக்க திருத்தம் செய்யப் பட்டிருக்கிறது. இதேபோல குற்றங்களில் பயன்படுத்தக் கூடிய அனைத்து அசையும் சொத்துக்களையும் பறிமுதல் செய்வதோடு மது அருந்துவதற்கு பயன்படுத்தப்படும் உரிமை இல்லாத இடங்களை மூடி முத்திரையிடவும், இந்த குற்றங்களை செய்யக்கூடிய நபர் எதிர் காலத்தில் இது போன்ற குற்றங் களை செய்வதிலிருந்து தடுப்பதற்கு கணிசமான தொகைக்கு பிணை முறிவினை நிறைவேற்றுவதற்கும் நிர்வாகத்துறை நடுவருக்கு அதிகாரம் அளிக்க வழிவகை செய்யப் பட்டு இருக்கிறது” என்றும் விளக்கினார். இந்த திருத்த மசோதா, உறுப்பினர் களின் விவாதத்திற்கு பின் சட்ட சபையில் நிறைவேற்றப் பட்டது.

இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தம்) சட்டம் என அழைக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டு, உடனடியாக ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில், கள்ளச் சாராயத்தை முற்றிலும் ஒழிக்கும் வகையில் கடுமையான தண்டனைகளை விதிக்கும் மதுவிலக்குத் திருத்தச் சட்ட மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி தற்போது ஒப்புதல் அளித்துள்ளார்.

# பெரம்பலூர் மாவட்ட ஊரகப் பகுதிகளில் - ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம்!

### சிறுவாச்சூர் ஊராட்சியில் – அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்! கே.என்.அருண் நேரு எம்.பி. பங்கேற்பு!

பெரம்பலூர், ஜூலை,14-

ஊரகப்பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வை பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், சிறுவாச்சூர் ஊராட்சிக்குட்பட்ட ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் மக்களோடு அமர்ந்து போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் நேரலையில் நிகழ்ச்சியை பார்த்து பின்னர், மக்களுடன் முதல்வர் முகாமை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு , பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி ச.ஷ்யாம்ளா தேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுமக்கள் அன்றாடம் அணுகக்கூடிய அரசுத்துறைகளின் அலுவலர்களை ஒருங்கிணைத்து சிறப்பு முகாம் நடத்தி மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெறும் ”மக்களுடன் முதல்வர்” என்ற திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம் ஆவாரம்பாளையத்தில் தொடங்கி வைத்தார். அதனையடுத்து பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, ஒரு மாத காலத்திற்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு 6.02.2024 அன்று பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 1,320 பயனாளிகளுக்கு பல்வேறு அரசுத்துறைகளின் திட்டங்களின் மூலம் ரூ.2.20 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகப்பகுதி மக்களுக்கான ”மக்களுடன் முதல்வர்” திட்டத்தை தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சி சிறுவாச்சூர் ஊராட்சி ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நேரலையில் ஒளிபரப்பப்பட்டது. போக்குவரத்துத்துறை அமைச்சர் நேரலை நிகழ்வை பார்வையிட்ட பின், முகாமினை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். மேலும், முகாம்களின் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் ஆன்லைனில் பதிவு செய்யப்படும் முறை, வழங்கப்படும் சேவைகள் குறித்தும் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு. வடிவேல் பிரபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் வைத்தியநாதன் (பொது), ஜெய்சங்கர்(ஊராட்சி வளர்ச்சி), ஊராட்சிகளுக்கான உதவி இயக்குநர் வீரமலை, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் திருமதி மீனா அண்ணாத்துரை (பெரம்பலூர்), க. இராமலிங்கம் (வேப்பந்தட்டை), திருமதி பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), பேரூராட்சித் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், அ. கருணாநிதி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் அனைத்துத் துறை களின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத்தலைவர் – தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்பேரில் கழக இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆணையின்படி கலைஞர் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு இளைஞரணி சார்பில் நடைபெறும் மாநில அளவிலான பேச்சுப்போட்டி குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கல்லூரி முதல்வருக்கு எழுதிய வேண்டுகோள் கடிதத்தினை காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி முதல்வரிடம் சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் அளித்தார். உடன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பரணிகிட்டு, நிர்வாகிகள் ஜெபத்துரை, கார்த்திக், ஆதிகணேஷ், கவுதம் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் முகாமினை துவக்கி வைத்ததை தொடர்ந்து தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்ட முகாம் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார்,சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ராஜா (சங்கரன்கோவில்)சதன் திருமலை குமார் (வாசுதேவநல்லூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்யப்படுவதை பார்வையிட்டார். உடன் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் து.பெ.சுரேஷ்குமார், ஒன்றியக் குழு தலைவர் லாலா சக்கரபாண்டியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள்,அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.